சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – கோவை கோட்டம் – திரு மு.முத்துமனோஜ், என்பவர் கருணையடிப்படையில் 31.10.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது

வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை

அரசாணை (டி) எண்.11

நாள் 22.01.2021
சார்வரி , தை–9,
திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. இணை ஆணையர் (வணிகவரி), கோவை அவர்களின் செயல்முறைகள் எண்.2217/2017/அ2, நாள் 16.10.2018.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
4. கூடுதல் ஆணையரின் (நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம் கடித எண். ஒய்3/2686/2020, நாள் 17.07.2020 மற்றும் 14.12.2020.

*****

ஆணை:

வணிகவரித் துறையின் கோவை கோட்டத்திற்குட்பட்ட துணை ஆணையர் (வணிகவரி), பொள்ளாச்சி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்தபோது திரு சி.முத்துக்கண்ணன் என்பவர் 22.09.2017 அன்று மரணமடைந்ததால் அவரது மனைவி திருமதி S. ராஜாமணி என்பவர் தனது மகன் திரு. மு.முத்துமனோஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 31.05.2018 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு. மு.முத்துமனோஜ், இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேற்படி கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கோவை கோட்டம், இணை ஆணையர் (வணிகவரி) அவர்களின் செயல்முறைகளின்படி திரு. மு.முத்துமனோஜ், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு வணிகவரித் துறையின் கோவை கோட்டம், உதவி ஆணையர் (வணிகவரி), பொள்ளாச்சி அலுவலகத்திற்கு தனியர் ஒதுக்கீடு செய்யப்பட்டு 31.10.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு மு.முத்துமனோஜ் என்பவருக்கு, அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 31.10.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்காணும் கூடுதல் ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில், திரு. மு.முத்துமனோஜ், கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, அதாவது, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

/Attested/

3/11/21

Commercial Tax Officer / Manager
Office of the Deputy Commissioner (CT)
Pollachi.